**சிறப்பு அமர்வு நீதிமன்றம், எஸ்.சி/எஸ்.டி. ஆக்ட் வழக்குகள், விழுப்புரம்**
முன்னிலை: **திருமதி. எஸ்.எழில், எம்.எல்., அமர்வு நீதிபதி.**

2019ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் வெள்ளி கிழமை.

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 1/2018**

(விழுப்புரம் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளர்,
வளவனூர் காவல் நிலைய குற்ற எண்.590/2015)

*****

| | | | |
|---|---|---|---|
| எதிரி பெயர் | : | முருகன்<br>த/பெ.ராமானுஜம். | |
| காவல் துறையினர் சாட்டப்பட்ட குற்றம் | : | எதிரி மீது 294(b),323, IPC r/w 3(r)(s) SC/ST (POA) Amendment ordiance Act 2014 r/w 4 o Women Harrasment Actன்படி | |
| நீதிமன்றத்தில் வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது இ.த.ச. 294(b), 323, 506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r)(s) Amendment Ordiance 2014ன்படி. | |
| 1. அசிங்கமும், அருவருப்பும் ஏற்படும்படியான வார்த்தைகளால் திட்டுதல் | இ.த.ச 294(b) வது பிரிவின் கீழ் | | எதிரி மீது |
| 2. தன்னிச்சையாக சொற்ப காயம் விளைவித்தல் | இ.த.ச.323வது பிரிவின் கீழ். | | எதிரி மீது |
| 3.குற்றமுறு மிரட்டல் விடுத்தல். | இ.த.ச.506(i) பிரிவின்கீழ் | | எதிரி மீது |
| 4.தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான தாக்குதல் | பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவின் கீழ் | | எதிரி மீது |
| 5. பட்டியலில் கண்ட சாதியினர்/ பட்டியலில் கண்ட பழங்குடியினா சாதி பெயரைச் சொல்லி திட்டுதல் | பிரிவு 3(1)(r)(s) பட்டியலில் கண்ட சாதியினர்/ பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்சட்டம் Amendment Ordiance 2014கீழ் | | எதிரி மீது |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை. | |
| நீதிபதியின் தீர்மானம் | : | எதிரி இ.த.ச 323 (2 எண்ணிக்கைகள்)படி | |

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி என்று தீர்மானித்து தலா எண்ணிக்கைக்கு தலா ரூ1000/- கட்ட தவறினால் தலா 3 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் இ.த.ச. 294(b),506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி குற்றவாளிகள் அல்ல எனத் தீர்மானிக்கப்பட்டது. |
| தண்டனை அல்லது உத்தரவு பற்றிய விவரம் | | இறுதியாக, எதிரி இ.த.ச 323(2 எண்ணிக்கைகள்)படி குற்றவாளி என்று தீர்மானித்து தலா எண்ணிக்கைக்கு தலா ரூ1000/- கட்ட தவறினால் தலா 3 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் இ.த.ச. 294(b),506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச.235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இந்த வழக்கில் சான்று பொருட்கள் இல்லை என்பதால் சான்று பொருட்கள் குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 15.11.2019ந் தேதி என் முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்தபோது, எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.அழகுவேல் அவர்களும், அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் திரு.K.R.சுந்தரமூர்த்தி அவர்களும் ஆஜராகி, அவர்களது வாதப்பிரதிவாதங்களைக் கேட்டறிந்து, வழக்காவணங்களை ஆராய்ந்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

தீர்ப்பு

விழுப்புரம் காவல் துணை கண்காணிப்பாளர் எதிரி மீது 294(b),323, IPC r/w 3(r)(s) SC/ST (POA) Amendment ordiance Act 2014 r/w 4 o Women Harrasment Actன்படி தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில், இவ்வழக்கின் சாட்சிகள் இவ்வழக்கின் எதிரியின் செங்கல் சூளைக்கு வேலைக்கு வராதது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தநிலையில் 13.06.2015ம் தேதி மாலை 1,2 சாட்சிகள் குமுளம் கிராமத்தில் எதிரியின் செங்கல் சூளையில் வேலை செய்துகொண்டிருந்தபோது பாலாஜிக்கு தரவேண்டிய பணத்தை சின்னராசுவிடம் கேட்டபோது மாலை சுமார் 6 மணியளவில் 1வது சாட்சியை தேவிடியா பையா நீ இங்கு வந்தா பணம் கேட்கிறாய் என்று திட்டி அடித்ததாகவும் சாட்சி 2ஐ அசிங்கமாக திட்டி தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

எதிரி மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு பற்றி இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட குற்றம் செய்திருக்கக்கூடும் என்று இந்நீதிமன்றம் கருத அடிப்படை உள்ளதால், எதிரி மீது இ.த.ச. 294(b), 323, 506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி. குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கிக்கூறக் கேட்க, குற்றச்சாட்டுக்களை மறுத்து குற்றவாளிகள் அல்ல என கூறினார்.

எதிரிகள் மீதுள்ள குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் 14 சாட்சிகள், 11 சான்றாவணங்கள், ஆகியவைகள் தாக்கல் செய்து விசாரணை செய்யப்பட்ட வழக்கின் விவரமாவது :-

அ.சா.1 திரு. முருகன் தனது சாட்சியத்தில் திருக்கனூர் கிராமத்தில் உள்ள பாலாஜி என்பவர் செங்கல் சூளையில் 2 வருடமாக செங்கல் அறுப்பதாகவும் தனது மனைவியின் தாய்மாமன் சின்ராஜ் என்பவருக்கு பாலாஜி என்பவரிடம் ரூபாய் 80,000 வாங்கி கொடுத்ததாகவும் அந்த தொகையில் ரூபாய் 50,000 கொடுத்து மீதியுள்ள 30,000 தொகைக்கு வேலை செய்யவில்லை என்றும் பாலாஜிக்கு சின்ராசு கொடுக்கவேண்டிய 30,000ஐ கேட்டபோது சின்ராசு தேவிடியா பையா பணம் கொடுக்கமாட்டேன் என்று சொன்னார் என்றும் எதிரி முருகன் சின்ராசிடம் பணம் கேட்ககூடாது என்று சொல்லி தன்னை கையாலும் சவுக்கு குச்சியால் இடது கன்னத்திலும், முதுகிலும் அடித்ததாகவும் அடிக்கும்போது வேட்டைக்கார

நாயே வேட்டைக்கார தேவிடியா பையா என் சூளைக்கு வரக்கூடாது என்று சூளையிலிருந்து சுமார் அரை கி.மீ வரை அடித்து துரத்தியதாகவும் தன் மனைவி ஏன் அடிக்கிறாய் என்று கேட்டபோது எதிரி திட்டியும் கையால் தன் மனைவியை அடித்தார் என்றும் திண்டிவனம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும் பிறகு தங்கள் சாதி தலைவர் கல்யாணியிடம் விவரம் சொன்னதாகவும் அதன்பிறகு வளவனூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததாகவும் அந்த புகாரை கல்யாணி எழுதி கொடுத்ததாகவும் புகாரிலுள்ள கையெழுத்து தன்னுடையது என்றும் அது அ.சா.ஆ.1 என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.2 திருமதி.முத்தம்மாள் தனது சாட்சியத்தில் அ.சா.1 தன்னுடைய கணவர் என்றும் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் 13.6.2015ம் தேதிக்கு 1 வருடத்திற்கு முன்பு பாலாஜி என்பவரிடம் செங்கல் சூளையில் வேலை செய்யும்போது சின்ராசுக்கு பாலாஜியிடமிருந்து 80,000 ரூபாய் பணம் வாங்கி கொடுத்ததாகவும் அந்த தொகையில் 50,000 அடைத்துவிட்டு மீதி 30,000 ரூபாயை சின்ராசிடம் வாங்கி கொடுக்கும்படி பாலாஜி கேட்டார் என்றும் பணம் கொடுக்கமுடியாது என்று அசிங்கமாக திட்டியதாகவும் ஏன் என் மனைவியை திட்டுகிறாய் என்று தன் கணவர் கேட்கும்போது சூளையின் மேலிருந்த எதிரி முருகன் கீழே வந்து வெளியே போடா தேவிடியா பையா, வேட்டைகார நாயே என்று திட்டி அடித்து தள்ளியதை தான் கேட்டபோது தன்னை திட்டி அடித்ததாகவும் தாங்கள் தங்கள் சாதி தலைவர் கல்யாணியிடம் போய் நடந்த விவரத்தை சொன்னதாகவும் அவர் புகார் எழுதி கொடுத்ததாகவும் திண்டிவனம் மருத்துவமனையில் இரவு சிகிச்சை எடுத்துக்கொண்டு மறுநாள் வளவனூர் காவல் நிலைத்தில் புகார் கொடுத்ததாகவும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.3 திரு.சின்ராசு தனது சாட்சியத்தில் எதிரியை தெரியும் என்றும் பாலாஜி என்பவரிடம் செங்கல் சூளையில் செங்கல் அறுப்பதற்காக ரூபாய் 50,000 வாயங்கியதாகவும் அந்த பணத்தை தான் வேலை செய்து அடைத்துவிட்டதாகவும் மேற்படி செங்கல் அறுப்பதாக ரூபாய் 5,000 முன்பணம் வாங்கி கடந்த 5 வருடத்திற்கு முன்பு முருகன் அ.சா.1,2 எதிரிக்கு சொந்தமான செங்கல் சூளையில் எதியிடம் வாங்கிய 5,000 ரூபாய்க்கு செங்கல் அறுத்துவிட்டதாகவும் அ.சா.1,2 தன்னை அடித்ததாகவும் சூளையில் சண்டை போடவேண்டாம் என்று சொல்லி அ.சா.1,2ஐ எதிரி முருகன் அடித்து வெளியே இழுத்து தள்ளிவிட்டதாகவும் எதிரி அ.சா.1,2ஐ சாதி குறித்து திட்டவில்லை என்றும் தன்னை எதிரி முருகன் அடிக்கவில்லை

என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

அ.சா.4 திரு.பாலாஜி தனது சாட்சியத்தில் கடந்த 2012ம் வருடம் தான் செங்கல் சூளை வந்தபோது சின்னராசுக்கு செங்கல் அறுப்பதற்காக ரூ.80,000ம் முருகன் மற்றும் முத்தம்மாள் ஆகியோருக்கு 75,000ம் ரொக்கமாக கொடுத்ததாகவும் ரூ.50,000த்திற்கு மட்டுமே செங்கல் அறுத்தார்கள் என்றும் தான் செங்கல் சின்னராசு 50,000த்தில் 30,000ம் அடைத்துவிட்டார். மீதம் 20,000ம் தரவேண்டியிருந்தது என்றும் சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றும் தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

அ.சா.5,6 தங்களது சாட்சியத்தில் தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் போலீசாரிடம் அதை தான் சொன்னதாகவும் கூறியுள்ளார்கள்.

அ.சா.7 திரு.பாஸ்கர் தனது சாட்சியத்தில் தான் சுமார் 2 வருடத்திற்கு முன்பாக வளவனூர் காவல் நிலையத்திற்கு தன்னுடைய தனிப்பட்ட வேலைக்காக தானும், குமாரும் போயருந்தபோது போலீசார் தன்னை கையெழுத்து கேட்டார்கள் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் அதில் என்ன எழுதப்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ-2 என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

அ.சா.8 திரு. குமார் தனது சாட்சியத்தில் சுமார் 2 வருடத்திற்கு முன்பாக வளவனூர் காவல் நிலையத்திற்கு தன்னுடைய தனிப்பட்ட வேலைக்காக தானும் பாஸ்கரும் போயிருந்ததாகவும் அங்கு போலீசார் தன்னை கையெழுத்து கேட்டார்கள் தன்னிடம் காட்டப்டும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் அதில் என்ன எழுதப்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ-3 என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

அ.சா.9 திரு. ரங்கநாதன் தனது சாட்சியத்தில் தான் தற்போது கோட்டகடார் வருவாய் வட்டாட்சியராக பணியிலிருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும் கடந்த 13.8.15ல் தான் விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியராக பணியிலிருந்த போது விழுப்புரம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் முருகன் த/பெ ராமானுஜம் என்பவரின் சாதி அறிக்கை வேண்டி வேண்டுகோள் கடிதம் அனுப்பியிருந்தார் என்றும் மேற்படி நபரின் சாதி குறித்து சித்தலம்பட்டு வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மேற்கொண்டி விசாரணை அடிப்படையில் முருகன் த/பெ ராமானுஜம் என்பவர் இந்து வன்னியர் என்று சாதி

அறிக்கை வழங்கியுள்ளதாகவும் அந்த சாதி அறிக்கை அ.சா.ஆ.4 என்றும் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்கள் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.10 டாக்டர். வளவன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டிவனம் அரசு பொது மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிவதாகவும் இவ்வழக்கில் காயம்பட்ட முருகன் மற்றும் முத்தம்மாள் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த டாக்டர். செந்தில்பாலன் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார் என்றும் அவர் சிகிச்சை அளித்தபிறகு மேற்படி மருத்துவமனையில் பணிபுரியவில்லை என்றும் அவர் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகலை பரிசீலனை செய்து முருகன் மற்றும் முத்தம்மாள் ஆகியோருக்கு வெளிகாயம் இல்லை என்றும் கழுத்து வலி என்று சொல்லியுள்ளதால் அவர்களுக்கு புறநோயாளியாக சிகிச்சை அளித்து அவர்களுக்கு சொற்ப காயம் என்று கருத்து தெரிவித்துள்ளதாகவும் அந்த கருத்துரை அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 என்றும் டாக்டர் செந்தில்பாலன் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ8 என்றும் மாவட்ட துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.11 திரு. திருமணி தனது சாட்சியத்தில் தான் கிளியனூர் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வுபெற்றுவிட்டதாகவும் 15.6.15ந் தேதியில் தான் வளவனூர் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது சாட்சி முருகன் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று வளவனூர் கா.கு.எண். 590/15 294(b), 323 of IPC and r/w 3(1)(x) of SC/ST Act and 4 of TNWH Actன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிககை அ.சா.ஆ.7 என்றும் காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.12 திரு.வீமராஜ் தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னை மாநிலத்தில் குற்றவியல் நுண்ணறிவு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிவதாகவும் கடந்த 15.6.15ந் தேதியில் தான் விழுப்புரம் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்தபோது வளவனூர் காவல் நிலைய குற்ற எண் 590/15ல் தன்னை புலண் விசாரணை அதிகாரியாக நியமனம் செய்து மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள் செயல் முறை ஆணை பிறப்பித்துள்ளார் என்றும்அந்த உத்தரவு அ.சா.ஆ.8 என்றும் அதன் அடிப்படையில் வழக்கை புலண் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று குமார், பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார்

செய்துள்ளதாகவும் அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 9, வரைபடம் அ.சா.ஆ.10 என்றும் பின்னர் சம்பவ சாட்சிகளான முருகன், முத்தம்மாள், சங்கர், கலிவரதன், செல்வம், பாலாஜி, சின்னராசு, பாஸ்கர், குமார் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரிகள் மற்றும் சாட்சிகளுக்கு சாதி அறிக்கை கோரி வருவாய் வட்டாட்சியர் விக்கிரவாண்டி அவர்களுக்கும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் வேண்டு கோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் 15.6.15ந் தேதி 19.30 மணிக்கு செங்காடு பேருந்து நிறுத்தத்தில் ஆஜர் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் தனக்கு பணி மாறுதல் ஏற்பட்டதால் வழக்கின் கோப்பினை பின்னர் வந்த திரு.சங்கர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும் கூறியுள்ளார்.

அ.சா.13 திருமதி. க.சரஸ்வதி தனது சாட்சியத்தில் தான் தற்போது மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநராக செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பெரியசவலையில் உளுந்தூர்பேட்டை தாலுக்கா விழுப்புரம் பணிபுரிவதாகவும் கடந்த 14.11.17ந் தேதி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியராக பணியிலிருந்தபோது விழுப்புரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வளவனூர் காவல் நிலைய குற்ற எண் 509/15ல் வானூர் வட்டம் கொம்பூர் கிராமம் இருளர் குடியிருப்பை சேர்ந்த முருகன் த/பெ. ராமலிங்கம் வயது 37 மற்றும் திருமதி. முத்தம்மாள் க/பெ. முருகன் வயது 30 ஆகியோர்களுக்கு சாதி அறிக்கை வேண்டி வேண்டு கோள் கடிதம் அனுப்பியதன் பேரில் மேற்கண்ட நபர்கள் இந்து இருளர் இனத்தை சேர்ந்தவர்கள் என்று சாதி அறிக்கை வழங்கியுள்ளதாகவும் தான் வழங்கிய சாதி அறிக்கை அ.சா.ஆ.11 என்றும் விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பாளர் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

அ.சா.14 திரு.சங்கர் தனது சாட்சியத்தில் தான் தற்போது விழுப்புரம் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிவதாகவும் கடந்த 12.1.17ம் தேதி தான் விழுப்புரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக இருந்தபோது வளவனூர் காவல் நிலையத்திலிருந்தபோது காவல் நிலைய குற்ற எண் 591/15ல் தனக்கு முன் இருந்த திரு.வீமராய் என்பவர் வழக்கை புலன் விசாரணை செய்து பணி மாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் அதனை தொடர்ந்து தான் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அவர் விசாரித்த சாட்சிகளையே தானும் விசாரித்ததால் மறு வாக்குமூலம்

பதிவு செய்யவில்லை என்றும் எதிரி முருகன் என்பவருக்கு சாதி சான்றிதழ் அளித்த வருவாய் வட்டாட்சியர் திரு.ரங்கநாதன் என்பவரை விசாரணை செய்தும் அ.சா1க்கு முதல் உதவி சிகிச்சையளித்த டாக்டர் செந்தில் பாலன் என்பவரை விசாரணை செய்தும் சிகிச்சையளித்த திரு.வளவன் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றும் மேற்படி சாட்சிகளின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்ததாகவும் சாட்சிகளுக்கு சாதி அறிக்கை வழங்கிய திருமதி. சரஸ்வதி வருவாய் கோட்டாட்சியர் அவர்களை விசாரணை செய்து சாதி சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர் திரு.திருமணி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் தன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323 of IPC and r/w 3(1)(r)(s) of SC/ST (POA) Amendment Act 2015 மற்றும் சட்டபிரிவு 4 பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார்.

அ.சா. 14 சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிரிகளை கு.வி.மு.ச.313(1)(ஆ)வது பிரிவின்படி விசாரணை செய்ய சாட்சிகளின் வாக்குமூலங்களை மறுத்து குற்றவாளிகள் அல்ல என கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

இந்த வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய விஷயம் யாதெனில்,

> எதிரி மீது இ.த.ச. 294(b), 323, 506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இந்த வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

பிரச்சனை:-

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் அ.சா.1,2ஐ எதிரி கைகளால் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தி சாதி பெயரைச் சொல்லி இழிவுபடுத்தியதாக 1 முதல் 3 சாட்சிகள் சாட்சியம் அளித்திருப்பதாகவும் எதிரி வன்னியர் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் சாட்சிகள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் மேற்படி எதிரி சாட்சிகளை கேவலமாக திட்டியும் அடித்தும் வாய்மொழியாக கொலை மிரட்டல் விடுத்தும் சம்பவத்தில்

ஈடுபட்டதாகவும் எதிரி குற்றவாளி என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் புகார் 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டிருப்பதாகவும் காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றும் சம்பவ இடம் எதிரிக்கு சொந்தமான செங்கல் சூளை என்றும் அது பொது இடம் அல்ல என்றும் சம்பவத்தை பார்த்த கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்திருப்பதாகவும் 1,2 சாட்சிகளுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் விபத்து பதிவேட்டு நகலில் 1,2 சாட்சிகளுக்கு வெளிக்காயங்கள் இல்லை என்றும் தொடுவலி இல்லை என்றும் சாட்சியம் அளித்திருப்பதாகவும் புகார்வாதிக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இல்லை என்றும் புகார்வாதி சாட்சியம் அளித்திருப்பதாகவும் எதிரி தன்னுடைய சூளையில் சத்தம் போடக்கூடாது என்று அ.சா.1,2ஐ பார்த்து சொன்னதால் எதிரியின் மீது கோபம் கொண்டு பொய்யான புகார் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில் அ.சா.1 தன் சாட்சியத்தில் திருக்கனூர் கிராமத்தில் பாலாஜி செங்கல் சூளை நடத்திவருவதாகவும் அவரிடம் வேலை செய்தபோது தன் மனைவியின் மாமா சின்னராசுக்கு 80,000ரூபாய் கடன் வாங்கி கொடுத்ததாகவும் மேற்படி சின்னராசு 50,000 ரூபாய் செலுத்திவிட்டதாகவும் மீதியுள்ள 30,000ஐ செலுத்தவில்லை என்றும் மேற்படி தொகையை சின்னராசுவிடமிருந்து வாங்கி தரும்படி பாலாஜி கேட்டதால் தானும் தன் மனைவியும் சின்னராசு வேலை செய்யும் எதிரியின் செங்கல் சூளைக்கு சென்று சின்னராசிடம் கேட்டபோது அவர் தரமுடியாது என்று திட்டியதாகவும் அப்போது எதிரி செங்கல் சூளையில் சத்தம்போடக்கூடாது என்று சொல்லி அ.சா1ஐ கையாலும், சவுக்கு குச்சியாலும் இடது கன்னத்திலும் முதுகிலும் அடித்ததாகவும் அடிக்கும்போது வேட்டக்கார நாயே வேட்டக்கார தேவிடியா பையா என்று சொல்லி அடித்ததாகவும் அதனைக் கேட்ட தன்னுடைய மனைவியையும் திட்டி கையால் அடித்ததாகவும் தன்னுடைய மனைவியின் தலை முடியை பிடித்து இழுத்து ரோட்டுக்கு வந்ததாகவும் தாங்கள் மருத்துவமனைக்கு சென்றதாகவும் அதன்பிறகு சங்கத்தலைவர் கல்யாணியிடம் புகார் எழுதிக்கொண்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் தான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 என்றும் கூறியுள்ளார்.

மேற்படி அ.சா.ஆ.1 புகாரை பரிசீலனை செய்கையில் மேற்படி புகாரில் 13.6.2015 அன்று எதிரியின் செங்கல் சூளைக்கு சென்று அங்கு வேலை செய்து கொண்டிருந்த சின்னராசுவிடம் பாக்கிபணம் கேட்டபோது செங்கல் சூளை உரிமையாளர் எங்களை பார்த்து இங்கு வந்து பணம் கேட்கவோ வேலைக்கு கூப்பிடவோ கூடாது என்று மிரட்டி என் கழுத்தில் ஓங்கி ஓங்கி பலமுறை குத்தினார் என்றும் அவருடைய அடி ஆட்கள் 2 பேர் பிடித்து வெளியே தள்ளிகொண்டு வந்தனர் என்றும் அதனை தடுக்க வந்த தன் மனைவி முத்தம்மாளை மேற்படி முருகன் முடியை பிடித்து கிழே தள்ளி கழுத்தில் குத்தினார் என்றும் வேட்டைக்கார நாய்களா என்று திட்டியதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி புகாரை பதிவு செய்த அ.சா.11 புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 பதிவு செய்துள்ளார். மேற்படி புகாரில் சம்பவ தேதி 13.6.2015 என்று சொல்லப்பட்டுள்ளது. புகார் கொடுத்த தேதி 15.6.2015 இரண்டு நாட்கள் கால தாமதமாக புகார் பெறப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக அ.சா.12 மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள் நியமன உத்தரவு அ.சா.ஆ-8 பிறப்பித்துள்ளார். மேற்படி அ.சா12 சம்பவ இடத்திற்கு சென்று குமார் பாஸ்கரன் முன்னியலை் பார்வை மகசர் வரைடம் தயாரித்துள்ளார். மேற்படி பார்வை மகசர் வரைபடத்தில் சம்பவ இடம் எதிரிக்கு சொந்தமான செங்கல் சூளை என்று காட்டப்பட்டுள்ளது. பார்வைமகசர் சாட்சிகளான அ.சா.7,8 சாட்சிகள் தங்கள் சாட்சியத்தில் காவல் நிலையத்தில் கையெழுதிட்டதாக கூறி பிறழ்சாட்சிகளாக உள்ளார்கள்.

சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா3 சின்னராசு தன் சாட்சியத்தில் பாலாஜி என்பவரிடம் தான் வாங்கிய கடனில் 50,000 செலுத்திவிட்டதாகவும் எதிரியிடம் தான் செங்கல் சூளையில் வேலை செய்துகெண்டிருந்தபோது அ.சா.1,2 பணம் கேட்டு தன்னை அடித்ததாகவும் அதனால் எதிரி தங்கள் சூளையில் சண்டை எதுவும் போடவேண்டாம் என்று அ.சா1,2ஐ எதிரி முருகன் அடித்து வெளியே இழுத்து தள்ளிவிட்டதாகவும் கூறியுள்ளார்.

மற்றொரு சம்பவ சாட்சியான அ.சா.5,6 தங்களுக்கு சம்பவம் குறித்து தெரியாது என்று பிறழ்சாட்சிகளாக உள்ளார்கள். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா1,2 சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா2 தன் சாட்சியத்தில் தன் மாமா சின்னராசு எதிரியின் செங்ல் சூளையில் வேலை செய்துகொண்டிருந்தபோது தானும் தனது கணவரும் சென்று பாலாஜிக்கு

கொடுக்கவேண்டிய மீதி தொகை 30,000ஐ கொடுக்கும்படி கேட்டபோது அவர் பணம் கொடுக்கமுடியாது என்று அசிங்கமாக திட்டியதால் தன் கணவர் ஏன் அவ்வாறு திட்டுகிறாய் என்று கேட்டபோது எதிரி முருகன் செங்கல் சூளையிலிந்து இறங்கி வந்து இங்கு வந்து என்ன காசு கேட்கிறாய் தேவிடியா பையா வேட்டக்கார நாயே என்று திட்டி தன் கணவரை எதிரியுடன் இருந்த 2 பேர் கீழே தள்ளி எதிரி தன் கணவரை அடித்து இழுத்துக்கொண்டே சென்றபோது அதை மறித்த தன்னை தேவிடியா என்று திட்டிக்கொண்டே முடியை பிடித்து ரோடு வரை தள்ளிக்கொண்டே வந்ததாக கூறியுள்ளார்.

அ.சா.1 தன் சாட்சியத்தில் எதிரி தன்னை கையாலும் சவுக்கு குச்சியால் அடித்ததாக கூறியுள்ளார். ஆனால் புகாரில் எதிரி தன்னை சவுக்கு குச்சியால் அடித்ததாக சொல்லவில்லை கழுத்தில் எதிரி கையால் குத்தியதாகவும் தன் மனைவி கழுத்திலும் குத்தியதாக கூறியுள்ளார். அ.சா1,2 தங்கள் சாட்சியத்தில் எதிரி தங்களை அடித்து ரோடுவரை தள்ளிவந்ததாக சொல்லப்படும் சங்கதிகள் எதுவும் புகாரில் சொல்லப்படவில்லை.

அ.சா.1,2க்கு சிகிச்சையளித்த மருத்துவர் செந்தில் பாலன் என்பவர் மருத்துவமனையில் பணிபுரியவில்லை என்பதல் அவர் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகலினைக் குறித்து அ.சா.10 வளவன் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ-5,6ல் அ.சா.1,2க்கு கழுத்தில் வலி இருப்பதாக சொன்னதன் பேரில் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் விபத்து பதிவேட்டு நகலில் தங்களை ஒரு நபர் கையால் 13.5.2015 மாலை 5 மணிக்கு அடித்ததாக மருத்துவர் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது.

அ.சா.1,2 சாட்சியத்தில் எதிரி தங்கள் கழத்தில் கையால் குத்தியதாக கூறியுள்ளார். சம்பவ சாட்சியான அ.சா3 தன் சாட்சியத்தில் எதிரி அ.சா.1,2ஐ கையால் அடித்ததாக கூறியுள்ளார்.

இவ்வழக்கில் சம்வ இடம் எதிரியின் செங்கல் சூளை என்று காட்டப்பட்டுள்ளதால் அது பொது இடம் அல்ல. அ.சா.1,2 தங்கள் சாட்சியத்திலும் புகாரிலும் எதிரியின் செங்கல் சூளைக்குள் சென்று அங்கு வேலை செய்து கொண்டிருந்த சின்னராசுவிடம் பணம் கேட்டபோது எதிரி ஏன் இங்கு வந்து சத்தம் போடுகிறீர்கள் என்று அடித்ததாக கூறியுள்ளார்கள். எனவே சம்பவ இடம் எதிரிக்கு சொந்தமான இடத்திற்கு எதிரியின் அனுமதி இலலாமல் அ.சா.1,2 சென்றுள்ளார்கள். எதிரி வேட்டைக்கார நாய்களா என்று

திட்டியதாக அ.சா.1,2 சாட்சியத்திலும் புகாரிலும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வேட்டைக்காரன் என்பது சாதி குறிப்பிடும் சொல் அல்ல. பொது இடத்தில் வைத்து தங்களை அவமானப்படுத்தியதாக அ.சா.1,2 சொல்லியிருப்பினும் சம்பவ இடம் எதிரிக்கு சொந்தமான செங்கல் சூளை என்பதால் அது பொது இடம் அல்ல. அ.சா.1,2 தங்கள் சாட்சியத்தில் எதிரிக்கும் தங்களுக்கும் எவ்வித முன்விரோதம் இல்லை என்று சொல்லியிருப்பதால் அ.சா.1,2 எதிரியின் செங்கல் சூளைக்குள் அத்துமீறி நுழைந்து சின்னராசுவிடம் பிரச்சனை செய்துள்ளதால் எதிரி கையால் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரியவருகிறது.

எதிரி தரப்பில் புகார் 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டிருப்பதாக வாதுரைக்கப்பட்டிருப்பினும் மேற்படி காலதாமதத்திற்கான காரணம் அ.சா.1.2 அவர்களுடைய தலைவரிடம் சென்று முறையிட்டு புகார் எழுதி வந்ததாக சொல்லும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அ.சா.1,2 படிப்பறிவு இல்லாதவர்கள் என்பதால் அவர்களுக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்படும் நேரத்தில் சங்கத்தலைவரிடம் தெரிவித்து புகார் கொடுப்பது இம்மாவட்டத்தில் இருளர் இனத்தவரிடையே பொதுவாக காணப்படும் வழக்கமாக உள்ளது. அ.சா.1,2 அறியாமையின் காரணமாக காலதாமதமாக புகார் கொடுத்துள்ளதால் மேற்படி காலதாமதம் வழக்கை பாதிக்கக்கூடியதாக இல்லை.

இவ்வழக்கில் எதிரி வன்னியர் என்றும் சாட்சிகள் இந்து இருளர் என்றும் சாதி சான்று அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.11 வருவாய் கோட்டாட்சியர் அ.சா13 அவர்களால் சான்று அளிக்கப்பட்டுள்ளது. அ.சா.1,2 சாட்சியத்தின்படி எதிரி வேட்டைக்காரர்களா என்று குறிப்பிடும் சொல் சாதியை சொல்லி இழிவுபடுத்துவதாக இல்லை. அ.சா3 தன் சாட்சியத்தில் எதிரி சாதி பெயர் சொல்லி திட்டவில்லை என்று கூறியுள்ளார். மேலும் சம்பவ இடம் எதிரிக்கு சொந்தமான செங்கல் சூளைக்குள் நடந்துள்ளதால் அது பொது இடம் அல்ல என்பதால் இ.த.ச 294(பி) மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) ஈர்க்கப்படவில்லை.

அ.சா.2 தன் சாட்சியத்தில் எதிரி தன்னை கழுத்தில் குத்தி கீழே தள்ளி ரோடு வரை தள்ளிகொண்டு வந்ததாக கூறியுளளார். ஆனால் புகாரில் முத்தம்மாளை முருகன் தலை முடியை பிடித்து கிழே தள்ளி கழுத்தில் குத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. ரோடுவரை இழுத்துச்சென்றதாக சொல்லப்படவில்லை. சம்பவ சாட்சியான அ.சா.3ம் தன் சாட்சியத்தில்

அ.சா1,2ஐ எதிரி கையால் அடித்ததாக கூறியுள்ளார். கீழே தள்ளியதாகவோ ரோடுவரை இழுத்துச்சென்றதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ இடம் செங்கல் சூளைக்குள் நடந்துள்ளதால் அ.சா2ஐ பொது இடத்தில் வைத்து வன்கொடுமை செய்ததாக சொல்லப்படும் சங்கதிகள் ஈர்க்கப்படவில்லை.

அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்படி அ.சா.1,2 எதிரியின் செங்கல் சூளைக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு பணிபுரிந்த சின்னராசுவிடம் கடன் தொகையை திரும்ப செலுத்தும்படி கேட்டு பிரச்சனை செய்துள்ளதில் செங்கல் சூளை உரிமையாளரான எதிரி செங்கல் சூளைக்குள் சத்தம் போடக்கூடாது என்று அ.சா1,2ன் கழுத்தில் கையால் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதும் சம்பவ இடம்பொது இடம் அல்ல என்பதும் சம்பவ இடத்தில் எதிரி சாதி பெயரைச் சொல்லி திட்டி இழிவுபடுத்தவில்லை என்பதும் அ.சா.2 வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படியும் குற்றம் புரியவில்லை என்றும் தெரியவருகிறது. எனவே எதிரி அ.சா.1,2ஐ கையால் அடித்து சொற்ப ஏற்படுத்தி இ.த.ச. 323ன்படி குற்றம் புரிந்துள்ளார் என்றும் இ.த.ச. 294(b),506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி குற்றம் புரியவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, எதிரி இ.த.ச 323(2 எண்ணிக்கைகள்) படி குற்றவாளி என்று தீர்மானித்து தலா எண்ணிக்கைக்கு தலா ரூ1000/- கட்ட தவறினால் தலா 3 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் இ.த.ச. 294(b),506(i), பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 4வது பிரிவு, வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1)(r) (s) Amendment Ordiance 2014ன்படி குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச.235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சான்று பொருட்கள் இல்லை என்பதால் சான்று பொருட்கள் குறித்த உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்பு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று (15.11.2019) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-எஸ்.எழில்
அமர்வு நீதிபதி,
சிறப்பு எஸ்.சி./எஸ்.டி நீதிமன்றம்,
விழுப்புரம்.

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

அ.சா.1/ திரு.முருகன்.

அ.சா.2/ திருமதி.முத்தம்மாள்

அ.சா.3/ திரு.சின்ராசு

அ.சா.4/ திரு.பாலாஜி

அ.சா.5/ திரு.சங்கர்

அ.சா.6/ திரு.கலிவரதன்

அ.சா.7/ திரு.பாஸ்கர்

அ.சா.8/ திரு. குமார்

அ.சா.9/ திரு. ரங்கநாதன்

அ.சா.10/ டாக்டர். வளவன்

அ.சா.11/ திரு. திருமணி

அ.சா.12/ திரு.வீமராஜ்

அ.சா.13/ திருமதி. க.சரஸ்வதி

அ.சா.14/ திரு.சங்கர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

அ.சா.ஆ.1/ அ.சா.1ன் புகாரிலுள்ள கையொப்பம் மட்டும்.

அ.சா.ஆ.2/ அ.சா.7ன் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும்.

அ.சா.ஆ.3/ அ.சா.8ன் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும்.

அ.சா.ஆ.4/ சாதி அறிக்கை

அ.சா.ஆ.5/ மருத்துவ கருத்துரை.

அ.சா.ஆ.6/ மருத்துவ கருத்துரை.

அ.சா.ஆ.7/ முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.8/ விபத்து பதிவேட்டு நகல்.

அ.சா.ஆ.9/ பார்வை மகசர்

அ.சா.ஆ.10/ வரைபடம்

அ.சா.ஆ.11/ சாதி அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u> :-**

- இல்லை -

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள்,சான்றுபொருட்கள்</u>:-**

- இல்லை -

ஒப்பம்/-எஸ்.எழில்
அமர்வு நீதிபதி,
சிறப்பு எஸ்.சி./எஸ்.டி நீதிமன்றம்,
விழுப்புரம்.